# தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம்,
# சைதாப்பேட்டை, சென்னை 600 015

**சுற்றறிக்கை எண் 01/2017 நாள்: 01.03.2017**

பொருள் : காலியாக உள்ள உதவி மேலாளர் பணியிடத்தை தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் பூர்த்தி செய்தல் – விண்ணப்பங்கள் வரவேற்றல் – தொடர்பாக.

************

இக்கழகத்தின் மண்டல கிளை அலுவலகத்தில் காலியாக இருக்கும் ஒரு உதவி மேலாளர் பணியிடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாற்ற கீழ்க்கண்ட தகுதியுடைய முன்னாள் படைவீரர்கள் தமிழ்நாட்டில் உள்ள எந்த மாவட்டத்திலும் பணிபுரிய/மாற்றத்திற்குரிய, விருப்பமுள்ள நபர்கள், நேரடியாக இணைத்துள்ள படிவத்தில் தனிநபர் விண்ணப்பத்துக்கான விவரங்களை 15.03.2017 க்குள் பொது மேலாளர், தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம், நம்பர் 2, மேற்கு மாட வீதி, ஸ்ரீநகர் காலணி, சைதாப்பேட்டை, சென்னை –15 என்ற முகவரிக்கு அனுப்ப கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தகுதிகள்

(1) முன்னாள் ஜே.சி.ஓ (Ex-JCO), ஹவில்தார் (எழுத்தர்) (Havildhar Clerk) முப்படையில் பெற்ற இளநிலைப் பட்டம் (அ) தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலை கழகத்தில் பெற்ற இளநிலைப் பட்டம் அதற்கு நிகரான தகுதி.

(2) எழுத்து மற்றும் பேச்சாற்றலுடன் குறைந்தது டெக்ஸ்கோர்வில் 5 வருட அனுபவம் உடன் தலைமை மற்றும் கிளை அலுவலகங்களில் தற்போது பணியாற்றி வருபவரும் டெக்ஸ்கோவின் பல்வேறு பிரிவுகளில் (Projects)பணியாற்றுபவராக இருக்க வேண்டும்.

(3) விரும்பத்தக்கது – கணினியில் அடிப்படை அறிவு.

(4) உயர்த்தப்பட்ட வயது வரம்பு – 01.03.2017–ந்தேதியன்று பிற்படுத்தப்பட்டோர் /தாழ்த்தப்பட்டோர் / மலைவாழ் இனத்தைச் சார்ந்த்வராயின் 56 வயது மற்றும் இதர பிரிவுகள் 51 வயது நிரம்பியவராக இருக்கவேண்டும்.

எனவே, மேற்கண்ட தகுதியுடைய முன்னாள் படைவீரர்கள் தங்களின் விவரங்களை 15.03.2017–க்குள் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

1.3.17

பொது மேலாளர்

பெறுநர் :

**அனைத்து உதவி மேலாளர்**
**அனைத்து உதவி இயக்குனர்கள், முன்னாள் படைவீரர்கள் நல இயக்ககம்.**
**தகவல் பலகை**

1/3/2017